நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# 2018

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

தரம் : உயர்நிலைப் பிரவு (ஆண்டு 11, 12)

**Level : Advanced (Year 11 & 12)**

வழங்கப்படும் நேரம் : 90 நிமிடங்கள்

(வாசிப்பதற்கான நேரம் 10 நிமிடங்கள் உட்பட)

Time Given : 90 Minutes (Including 10 minutes of reading time)

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

ஆசிரியரின் கவனத்திற்கு :

மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.

(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

**June 2018**

“புல்லைக் காட்டிலும் வேகமாக வளர்வது எது?” என்று கேட்கும் யட்சனுக்கு ‘கவலை’ எனப் பதில் சொல்கிறான் யுதிஷ்டிரன். மகாபாரதத்தில் வரும் இந்த ஒற்றைவரி, இன்றைக்கும் மனதில் ஒரு நாணல் போல அசைந்துகொண்டே இருக்கிறது. உதிர்ந்து கிடக்கும் மயிலிறகைக் கையில் எடுத்துப் பார்க்கும்போது மயிலின் கம்பீரம் இறகிலே புலப்படுவது போல மகாபாரதம் இராமாயணம் போன்ற இதிகாசங்களின் எந்த ஒரு பாடலை வாசித்தாலும் அதன் பிரமாண்டமும், அழகும், வாழ்வு குறித்த நுட்பமான பதிவுகளும், சொல்லின் சுவையும் புரிகின்றன.

இதிகாச கதாபாத்திரங்கள் துடுப்பில்லாத படகு ஆற்றில் அலைக்கழிக்கப்படுவது போல, வாழ்க்கை கொண்டுசெல்லும் பக்கமெல்லாம் அலைபடுகிறார்கள். ஆனால், ஒருநாள் படகு எங்கோ திசை தெரியாத ஒரு கரையில் ஒதுக்கப்படுவது போல, அவர்களின் முடிவும் வெளிப்படுத்த முடியாத துயரமும் தனிமையுமாக எங்கோ கரைகட்டி நின்றுவிடுகிறது.

மகாபாரதத்தில் விதுரன், சொல்லை அறிந்தவன். ஒருமுறை திருதராஷ்டிரனிடம் விதுரன் சொல்கிறான், “கோடரியால் வெட்டபட்ட மரம் கூடத் திரும்ப முளைத்து விடக்கூடியது. ஆனால், கடுஞ்சொல்லால் துண்டிக்கப்பட்ட உறவு ஒருபோதும் சேர்வதேயில்லை”.

கங்கையின் கரைகளில் சுற்றித் திரிந்த நாட்களில் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் பாறையின் மீது அமர்ந்தபடி ஆகாயத்தைப் பார்த்தபடியிருக்கும் துறவிகளை நான் கண்டிருக்கிறேன். பறந்து செல்லும் பறவையைப் பார்ப்பது போல, மேகங்கள் கடந்துபோவதை அவர்கள் ஆனந்தத்துடன் பார்த்துக்கொண்டு இருப்பார்கள். சில நேரங்களில் தங்களது பாறைகளிலிருந்து எழுந்து நின்று எதையோ பார்த்துக் கைகொட்டி ரசிப்பார்கள். ஆனால் என்ன காண்கிறார்கள் என்று எவருக்கும் தெரியாது.

இருள் கலையாத விடிகாலையில் கங்கையில் குளிப்பதற்காக திரி விழுந்த சடாமுடியும் யோகம் பயின்ற உடலுமாக துறவிகள் வருவார்கள். சீற்றமான ஆற்றின் ஒரு பாறையில் அமர்ந்தபடி அங்கே வரும் போகும் மனிதர்களைப் பார்த்துக்கொண்டு இருப்பேன். எனது நாட்டமெல்லாம் இயற்கையை அறிந்து கொள்வது மட்டும்தான். கங்கை பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்த மழைக்காலம் அது. ஆற்றின் விசை கடுமையாக இருந்தது. நேற்றுப் பார்த்த பாறைகள் இன்று தண்ணீரில் மூழ்கிக்கிடக்கும். மான்கள் நீர் அருந்த வருவது போல அத்தனை அமைதியாகவும் ஆசையோடும் ஆங்காங்கே துறவிகள் நீர் முகத்துக்கு வந்து சேர்வார்கள். கையில் கொண்டு வந்திருக்கும் பூக்களை நீரில் மிதக்கவிட்டு ஏதோ பூஜை செய்வார்கள். பின்னர் தண்ணீரைக் கையில் ஏந்திப் பத்து முறை தீர்த்தம் போல குடிப்பார்கள்.

நான் இயற்கையிடம் கற்றுக் கொண்டதெல்லாம் அதன் பிரமாண்டமும் மௌனமும் மட்டுமே. பேச்சுப் பழகுவது எளிது. பேச்சை விட்டு விலகுவது எளிதானதில்லை. பிரமாண்டமான மலை எப்போதும் மௌனமாகவே இருக்கிறது. உலகுக்கு ஒளியை வாரியிறைக்கிற சூரியன் சத்தமிடுவதில்லை. தொடர் ஓட்டப் பந்தயக்காரர்கள் ஒருவர் கையிலிருந்து மற்றவர் பொருளை மாற்றி வாங்கிக்கொண்டு ஓடுவதுபோல, அத்தனை துல்லியமாக உலகில் தொடர்ந்து ஓடிக்கொண்டு இருக்கின்றன இரவும் பகலும்.

மகாபாரதத்தில் ஒரு முறை, பசி தாகத்தை விலக்கியபடி காட்டுக்குள் திரியும் விதுரனைக் காண்பதற்காகச் செல்கிறான் யுதிஷ்டிரன். உடல் மெலிந்து ஆளே உருமாறிப் போயிருந்த விதுரன், நீண்ட நாட்களுக்குப் பிறகு யுதிஷ்டிரனைக் கண்டதும் அவரறியாமல் கண்களில் பரிவும் அன்பும் வெளிப்படுகிறது. மொழி நாவில் இருந்து கண்களுக்கு இடம் மாறிவிட்டது போல அவர்கள் இருவரும் பேசிக் கொள்ளாமலே ஒருவர் மனதை மற்றவர் புரிந்துகொள்கிறார்கள். விதுரன் தன் பார்வையின் வழியாகவே தனது சக்தியைத் தந்துவிட்டு விலகிப் போய் விடுகிறார்.

மொழி தேவையற்ற இடங்கள் வாழ்வில் அரிதாகவே ஏற்படுகின்றன. மருத்துவமனை படுக்கையில் நோயுற்றவன் தன் வயதைப் பற்றிய பிரக்ஞையின்றி தானாக கண்ணீர் விடுகிறான். ஆறுதலாக அவனது தலையைக் கோதிவிடும்போது ஏற்படும் சாந்தியை, மொழியால் உருவாக்க முடியாது என்றே தோன்றுகிறது.

நன்றி: உள்ளங்கை எழுத்து, கதாசரிதம், எஸ் இராமகிருஷ்ணன். (சிறிய மாற்றங்களுடன்)

1. மேலே தரப்பட்ட உரைப்பகுதியில் புல்லைவிட வேகமாக வளர்வது எது எனக் கூறப்படுகிறது? (1 புள்ளி)

2. ஆசிரியரின் வாழ்வியல் சிந்தனையிலே மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன, ஆதாரங்கள் தருக. (2 புள்ளிகள்)

3. இதிகாச கதாபாத்திரங்களின் நிலைபற்றிய ஆசிரியரின் கவலை என்ன என நீர் கருதுகிறீர்? (2 புள்ளிகள்)

4. மகாபாரதத்தில், விதுரன் திருதரா'டிரனுக்கு சொன்ன கருத்தை விளக்கி, உமது சொற்களில் எழுதுக. (2 புள்ளிகள்)

5. 'பேசுதல்', இப்பொருள் பற்றி ஆசிரியர் சிந்திக்கின்ற சம்பவங்களை விளக்குக. (3 புள்ளிகள்)

6. இக்கட்டுரைப் பகுதிக்கு பொருத்தமான தலைப்பு எது எனக் கருதலாம்? (1 புள்ளி)

   அ) மௌனத்தின் முக்கியத்துவம்
   ஆ) கங்கையின் வீரியம்
   இ) மகாபாரத கதாபாத்திரங்களின் இயல்பு
   ஈ) உள்ளங்கை எழுத்து

**பின்வரும் 7 – 10 வரையான பாடல்வரிகளுக்கு பொருத்தமான புலவரைத் தெரிவு செய்க. (4 புள்ளிகள்)**

அ) பாரதிதாசன் ஆ) கம்பன் இ) திருவள்ளுவர் ஈ) பாரதி

7. 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
   பரவும் வகை செய்தல் வேண்டும்'

8. 'பிறக்கும் போதே பெருமையோடு பிறந்தவன் தமிழன்'

9. 'கை வண்ணம் அங்கு கண்டேன்
   கால் வண்ணம் இங்கு கண்டேன்'

10. 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
    இடுக்கண் களைவதாம் நட்பு'

**பின்வரும் 11 – 17 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான பதிலைத் தெரிவு செய்க. (7 புள்ளிகள்)**

11. ஆஸ்கார் விருது பெற்ற தமிழ் இசையமைப்பாளர் யார்?
    அ) இசைஞானி இளையராஜா
    ஆ) இசைப்புயல் ஏ ஆர் ரகுமான்
    இ) தேனிசைத் தென்றல் தேவா
    ஈ) ஜி வி பிரகாஷ்

12. மலையும் மலை சார்ந்த பிரதேசத்தினை எப்படி அழைப்பர்?
அ) மருதம் ஆ) குறிஞ்சி இ) முல்லை ஈ) பாலை

13. தமிழ் இலக்கிய வரலாற்றில் காப்பியங்கள் அதிகமாக எழுந்த காலப் பகுதி எது?
அ) சங்க காலம் ஆ) சோழர் காலம் இ) நாயக்கர் காலம் ஈ) பல்லவர் காலம்

14. அகலிகை கல்லாக இருந்து யாருடைய கால் பட்டதால் மீண்டும் பெண்வடிவம் பெற்றாள்?
அ) இலக்குவன் ஆ) இராமன் இ) இராவணன் ஈ) பரதன்

15. அறுபதாம் ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா எது?
அ) பொன் விழா ஆ) பவள விழா இ) வெள்ளி விழா ஈ) மணி விழா

16. முச்சங்கம் வைத்து தமிழ் வளர்த்த காலம் எது?
அ) சங்க காலம் ஆ) சங்க மருவிய காலம்
இ) சோழர் காலம் ஈ) பல்லவர் காலம்

17. தமிழில் இரட்டைக் காப்பியம் எனப்படுவது
அ) சிலப்பதிகாரம், மணிமேகலை ஆ) சிலப்பதிகாரம், குண்டலகேசி
இ) மணிமேகலை, வளையாபதி ஈ) சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம்

**பின்வரும் 18 – 22 வரையுள்ள வினாக்களில் தரப்பட்ட ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொல்லைத் தெரிவு செய்க. (5 புள்ளிகள்)**

(அ) தரவிறக்கம் (இ) கீச்சகம் (உ) படவரி
(ஆ) மின்னஞ்சல் (ஈ) இயங்கலை (ஊ) புலனம்

18 Download
19 Twitter
20 Instagram
21 Online
22 e-mail

**பின்வரும் வினா 23 - 25 வரையான பழமொழிகளுக்குப் பொருத்தமான வசனத்தினைத் தெரிவு செய்க. (3 புள்ளிகள்)**

23. 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்'
அ) சந்தர்ப்பத்தைத் தவற விடுதல் ஆ) சந்தர்ப்பத்திற்காகக் காத்திருத்தல்
இ) சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்துதல் ஈ) சந்தர்ப்பம் எப்போதும் தேடி வரும்

24. 'கிட்டாதாயின் வெட்டென மற'
அ) கிடைக்காது என்றால் கவலைப்படாதே ஆ) கிடைத்ததை நினைத்து மகிழ்ந்திரு
இ) கிடைக்காத ஒன்றை நினைப்பது நன்று ஈ) கிடைக்காத ஒன்றை மறப்பது நன்று

25. 'கிணற்றுத் தவளை போல'
அ) வெளியுலகம் தெரியாமை ஆ) நிறைந்த வெளி அனுபவம்
இ) யாவும் தெரிந்து நடத்தல் ஈ) யாவும் சரி

**பின்வரும் வினா 26 - 28 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான பதிலைத் தெரிவு செய்க. (3 புள்ளிகள்)**

26. யாழ் நூலை இயற்றியவர் யார்?
    அ) ஆறுமுகநாவலர் ஆ) விபுலானந்தர் இ ஞானப்பிரகாசர் ஈ) சோமசுந்தரப்புலவர்

27. கடிதம் என்பது பண்டைக் காலத்தில் எப்படி அழைக்கப்பட்டது?
    அ) முகநூல் ஆ) தபால் இ) முத்திரை ஈ) திருமுகம்

28. 'தருமி' எனும் புலவன் பரிசு பெறுவதற்காக பாடலுடன் எந்த மன்னனிடம் வந்தான்?
    அ) பாண்டிய மன்னன் ஆ) சோழ மன்னன்
    இ) சேர மன்னன் ஈ) பாரி மன்னன்

**பின்வரும் கவிதைப் பகுதியை வாசித்து 29 – 32 இலக்க வினாக்களுக்கு பூரண வசனங்களில் விடை எழுதுக:**

பட்டுக் கருநீலப் - புடவை பதித்த நல்வயிரம்
நட்ட நடு நிசியில் - தெரியும் நட்சத்திரங்களடி!

சோலை மலரொளியோ – உனது சுந்தரப் புன்னகை தான்?
நீலக் கடலலையே – உனது குரலினிமையடி!
வாலைக் குமரியடி! – கண்ணம்மா! மருவக் காதல் கொண்டேன்.

சாத்திரம் பேசுகிறாய் - கண்ணம்மா! சாத்திரமேதுக்கடி!
ஆத்திரங் கொண்டவர்க்கே – கண்ணம்மா! சாத்திரமுண்டோடி!

29. இக்கவிதையை எழுதியவர் யார்? (1 புள்ளிகள்)

30. கவிஞர் "நட்டநடு நிசியில் தெரியும் நட்சத்திரங்களைப் போல்" இருக்கிறது என எதை வருணிக்கிறார்? (2 புள்ளிகள்)

31. கவிஞர் புன்னகையின் அழகை எதற்கு ஒப்பிடுகிறார்? (2 புள்ளிகள்)

32. யாருக்கு சாத்திர சம்பிரதாயங்கள் தேவையில்லை எனக் கூறப்படுகிறது? (2 புள்ளிகள்)

**எழுத்தாக்கம்: 15 புள்ளிகள்**

**பின்வருவனவற்றில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்கு குறையாமல் எழுதுக.**

'மாறிவரும் உலகில் எமது உணவுப் பழக்க வழக்கம்' எனும் தலைப்பில் இளைஞர் கருத்தரங்கு ஒன்றில் பேசவுள்ளீர்கள். உங்கள் பேச்சினை எழுதுக.

அல்லது

படுக்கையை விட்டு எழுந்தபோது எனக்கு திடீரென இரண்டு இறக்கைகள் முளைக்கின்றன………… எனத் தொடங்கும் கற்பனைக் கதையை எழுதுக.

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2018